தமிழ்நாடு அரசு

# தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,

சென்னை - 600 025.

**விளம்பர அறிக்கை எண்.14664/ஐ-3/2025** **நாள் : 02.05.2025.**

## அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி சேர்க்கை-2025
## 2025-26-ஆம் கல்வி ஆண்டிற்கான நேரடி இரண்டாமாண்டு பட்டயப்படிப்பு மாணாக்கர்கள் சேர்க்கை (தமிழ்நாடு மாணாக்கர்களுக்கு மட்டும்)

தமிழ்நாடு அரசின் அனைத்து அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான **நேரடி இரண்டாமாண்டு** பட்டயப்படிப்பிற்கு விண்ணப்பிக்கவும், சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்யவும் கீழ்க்கண்ட இணையதளத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**விண்ணப்பிக்கும் முறை : https://www.tnpoly.in** என்ற இணையதள வாயிலாக விண்ணப்பங்கள் பதிவு செய்ய வேண்டும். இணையதள வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணாக்கர்கள் மாவட்ட சேவை மையங்கள் (TNEA Facilitation Centre) மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களின் பட்டியல் மேற்குறித்த இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது.

**கல்வித் தகுதி : நேரடி இரண்டாமாண்டு பட்டயச் சேர்க்கை : (Direct Second Year Diploma Admission) 12ம் வகுப்பு தேர்ச்சி (HSC) / அதற்கு இணையான கல்வித் தகுதியில் தேர்ச்சி.**

(அல்லது )

**10-ஆம் வகுப்பு தேர்ச்சிக்கு பின்னர் 2 ஆண்டுகள் தொழில் பிரிவில் பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (10th std passed + 2 years ITI (in any branch of Engineering and Technology) after 10th std passed.**

**பதிவுக்கட்டணம் :** பதிவுக் கட்டணமான **ரூ.150/-**ஐ விண்ணப்பதாரர் Debit Card / Credit Card / Net Banking இணையதள வாயிலாக செலுத்தலாம்.

SC/ST பிரிவினர் பதிவுக் கட்டணம் செலுத்த அவசியமில்லை.

| | |
|---|---|
| நேரடி இரண்டாமாண்டு பட்டயப் படிப்பிற்கான இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய துவங்கும் நாள் | **07.05.2025** |
| நேரடி இரண்டாமாண்டு பட்டயப் படிப்பிற்கான இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய இறுதி நாள் | **23.05.2025** |

12-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் / ITI மதிப்பெண் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், சிறப்பு பிரிவினர் சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்கள் மற்றும் விண்ணப்பதாரர் புகைப்படம் ஆகியவை தேவையான அளவுகளில் இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

அனைத்து தகவல்கள், வழிகாட்டி மற்றும் தொலைபேசி எண்கள் ஆகியவற்றை மாணாக்கர்கள் **https://www.tnpoly.in** என்ற இணையதள வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

**ஆணையர்,**
**தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,**
**சென்னை - 600 025.**

செ.ம.தொ.இ./ 448 /வரைகலை/2025